## பேருந்து நிறுத்தங்களை

# மெட்ரோ ரெயில் நிலையங்களுக்கு அருகில் மாற்ற ஏற்பாடு!

## சென்னை போக்குவரத்து கழகம் தகவல்!!

சென்னை, பிப் 20

சென்னையில் பல்வேறு முக்கிய இடங்களில் உள்ள பேருந்துநிறுத்தங்களைஅப் பகுதிகளில்உள்ளமெட்ரோ ரெயில் நிலையங்களுக்கு அருகாமையில் மாற்றுவதற்கு தேவையானநடவடிக்கையில் பெருநகர போக்குவரத்து கழகம் இறங்கியுள்ளது.

சென்னையில் சாலை போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் மெட்ரோரெயில்போக்குவரத்து கடந்த 2016ம் ஆண்டு கோயம்பேடு – ஆலந்தூர் இடையே தொடங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து தேனாம்பேட்டை டி.எம். எஸ். வரையிலும், பரங்கிமலையில் இருந்து சென்ட்ரல் வரை மெட்ரோ ரெயில் இயங்கப்பட்டு வருகிறது. அண்மையில் டி.எம்.எஸ். வண்ணாரப்பேட்டை மெட்ரோ ரெயில் சேவை தொடங்கப்பட்டநிலையில் முதல்கட்ட மெட்ரோ ரெயில் சேவைக்கான பணிகள்முழுமை பெற்றது. எனினும்பொதுமக்கள்மெட்ரோ ரெயில்சேவையைகுறைந்த எண்ணிக்கையிலேயே பயன்படுத்தி வருகின்றனர். கூடுதல் கட்டணம் ஒரு காரணம் என்றாலும், மெட்ரோ ரெயில் நிலையங்கள் அமைந்திருக்கும் பகுதிகளில் இருந்து பேருந்து நிறுத்தங்கள் வெகு தொலைவில் உள்ளதால் உடனடி போக்குவரத்துஇல்லாததும்ஒருகாரணமாக கூறப்பட்டது. மெட்ரோ ரெயில் நிலையங்களுக்கு அருகில் பேருந்து நிறுத்தங்கள் அமைந்தால் மட்டுமே தடையற்ற இலகுவான போக்குவரத்துக்கு அது வழிவகுக்கும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

எனினும், மெட்ரோ ரெயில் மற்றும் பேருந்து போக்குவரத்து சேவைகள் வேறு வேறாகவே பார்க்கப்பட்டு வந்தது. கீழ்பாக்கத்தைச் சேர்ந்த ஒருவர் கூறுகையில், நான் வசிக்கும்பகுதியில்ஷெனாய்நகர் மெட்ரோ ரெயில் நிலையம் உள்ளது. ஆனால் ரெயில் நிலையம் அருகில் பேருந்து நிறுத்தம் இல்லாததால், நீண்ட தூரம் நடந்து செல்ல வேண்டியுள்ளது. இல்லாவிட்டால் 3 பேருந்துகள் மாறி பணியிடத்துக்கு செல்லவேண்டும்என்றுகூறினார்.

சென்னை சென்ட்ரல் – ஆலந்தூர் வழித்தடத்தில் ஷெனாய் நகர், வடபழனி, அரும்பாக்கம், எல்.ஐ.சி. நந்தனம், மிலிட்டரி குவார்ட்டர்ஸ், சைதாப்பேட்டை, எஸ்.ஐ.இ.டி கல்லூரி உள்ளிட்ட பகுதிகளில் பேருந்து நிறுத்தங்கள் மெட்ரோ ரெயில் நிலையங்களுக்கு மிகவும்தொலைவில்உள்ளது.தற்போதுஇந்தபேருந்து நிறுத்தங்களை மெட்ரோ ரெயில் நிலையங்களுக்கு அருகில்மாற்றநடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக சென்னை போக்குவரத்து கழக மூத்த அதிகாரிகள் கூறியுள்ளனர். கடந்த ஆண்டு ஜூலை மாதம், சென்னை மெட்ரோ ரெயில் மற்றும் போக்குவரத்து கழக அதிகாரிகள் இணைந்து பேருந்து நிறுத்தங்களை மாற்றுவது தொடர்பாக ஆய்வு நடத்தியது குறிப்பிடத்தக்கது.